**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 36/2021 |
| Name | : David |
| P.W. | : 2 |
| Father Name | : Sellappan |
| Village | : Kannadiputtur |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : Church Pasteur |
| Religion | : |
| Age | : 40/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15 .02.2022

நான் கண்ணாடிப்புத்தூரில் குடியிருந்து சர்ச் பாஸ்டராக உள்ளேன். கடந்த 22.03.2021 ம் தேதி இரவு 10.30 மணிக்கு இளவரசன் அ.சா.1 எனது வண்டியை வாங்கிக் கொண்டு பெட்ரோல் வாங்க சென்றார். வரும் போது 2 பேர்கள் குறுக்காட்டி ஆஜர் 1, 2 எதிரிகள் குறுக்காட்டி கேள்வி கேட்டுள்ளார்கள். 1, 2 ஆஜர் எதிரிகள் நான் போய் பார்க்கும் போது இளவரசனை கையால் அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் சொல்லி சர்ச்சிற்கு அழைத்து வந்தேன். அவர்கள் சென்ற பிறகு யுவராஜ் என்ற எதிரி மற்ற எதிரிகளுக்கு போன் செய்து வரச்சொன்னார். அவர்கள் வந்தபின்பு நான், எனது மனைவி மற்றும் இளவரசன் ஆகியோர் சர்ச்சிற்குள் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தோம். ஆஜர் 2, 3, 4 எதிரிகள் சர்ச்சிற்குள் தாண்டி குதித்து உள்ளே வந்து அடிக்க வந்தார்கள். நான் சொல்ல

சொல்ல 3 எதிரிகளும் இளவரசனை போசியால் தலையில் அடித்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் போசியால் தான் அடித்தார்கள். அது ஏற்கனவே அரசு சான்று பொருள் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் 3 ம் எதிரி சமீர் பிளாஸ்டிக் சேரை எடுத்து இளவரசனை அடித்தார்க. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பிளாஸ்டிக் சேரை எடுத்து தான் அடித்தார்கள். அது ஏற்கனவே அரசு சான்று பொருள் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இளவரசனுக்கு தலையின் இடது பக்கம் காயம் ஏற்பட்டது. ரத்தம் வருவதை பார்த்து எதிரிகள் சென்று விட்டார்கள். நான் ஆம்புலன்சிற்கு போன் செய்து மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். எதிரிகள் அடிக்கும்போது தாயோழி என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். போகும் போது எதிரிகள் கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.